திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

நூலகக் கட்டடம்

***36021— திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசு கலைக் கல்லூரியில் நூலகத்திற்கென தனியாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி எனது பதிலைக் கூறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசு கலைக் கல்லூரியில் 90 வகுப்பறைகள் உள்ளன. இதில் தற்பொழுது 1,200 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தில் ஒரு நூலகம் இயங்கி வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சேலம் அரசு கலைக் கல்லூரி*

2014 டிசம்பர் 4]

140 ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்லூரியாகும். மொழி ஞாயிறு தேவநேயபாவாணர் அவர்கள் பணியாற்றிய கல்லூரி சேலம் அரசு கலைக் கல்லூரியாகும். இக்கல்லூரியில் சுமார் 5,000 ஏழை, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இக்கல்லூரிக்குப் போதுமான வகுப்பறை வசதிகள் இல்லாமல் மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இக்கல்லூரிக்கு அடிப்படை வசதிகளுடன்கூடிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் பன்முக பயன்பாட்டிற்கேற்றவாறு கலையரங்கம் ஆகியவற்றை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அமைத்துக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் அரசு கலைக் கல்லூரியின் வரலாற்றினைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 1904 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியாகும். அக்கல்லூரியில் சுமார் 5,161 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். ஏற்கெனவே, நான் சொன்னதைப்போல 90 வகுப்பறைகள் கொண்ட கட்டடங்கள் இருக்கின்றன. சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வீரபாண்டி திரு. எஸ்.கே. செல்வம் அவர்களும், திரு. எம்.கே. செல்வராஜ் அவர்களும், அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தக் கல்லூரியில் கட்டடங்கள் கட்டுவதற்கான நிதியினை ஒதுக்கித்தந்து கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நூலகத்திற்காக ஒரு தனிக் கட்டடம் வேண்டும் என்ற ஒரு கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். பொதுவாக, நூலகம் என்று ஒன்று இருந்தால்தான் மாணவர்களுடைய கல்வித் தரம் உயர்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். சேலம் மாவட்டத்திற்கான*

மாவட்ட மைய நூலகம் அந்தக் கல்லூரியின் வளாகத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது.

மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அதிகமாகத் திட்டங்களை கொண்டுவந்திருப்பதன் காரணமாக அரசு கலைக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை விகிதம் தற்போது அதிகரித்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் கட்டட வசதி தேவைப்படுவது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, எதிர்காலத்தில் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கே கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற நேரத்தில் அங்கு தேவையிருப்பின் கட்டட வசதி செய்துகொடுக்கப்படும் என்று இங்கு கூறினார்கள். அதற்காக மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சேலம் மாநகரத்தின் மையப் பகுதியில் அமைந்து சேலத்திற்குப் பெருமை சேர்க்கும் சேலம் அரசு கலைக் கல்லூரியில் இளங்கலை அரசியல், அறிவியல் மற்றும் புவியியல் முதுகலைப் பாடப் பிரிவுகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் வரும் கல்வியாண்டில் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 *டிசம்பர்* 4]

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மூன்றாவது முறையாக அமையப்பெற்ற பின்பு, தமிழகத்தில் இதுவரையில் இல்லாத அளவிற்கு கூடுதலாக 998 பாடப் பிரிவுகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் கல்லூரியில்கூட 15 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால்* B.A. (Political Science), B.A. (Public Administration) *போன்ற பாடப் பிரிவுகள், தமிழ்நாட்டில் எந்தக் கல்லூரியிலும் இல்லாத அளவிற்கு சேலம் அரசு கலைக் கல்லூரியில் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும், மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் மன்னர் துரைசிங்கம் இருபாலர் கல்லூரி மற்றும் அரசு மகளிர் கலைக் கல்லூரி என்ற இரண்டு கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 2011-லிருந்து இந்த ஆண்டு வரை, இந்த இரண்டு கல்லூரிகளிலும் கூடுதலான பாடப் பிரிவுகள், அதாவது, இளங்கலை, முதுகலை மற்றும் எம்.ஃபில்., பி.எச்டி. போன்ற பாடப் பிரிவுகளெல்லாம் அதிகமான அளவிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு நான் தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்திருக்கிறேன். ஏற்கெனவே, அந்தக் கல்லூரிகளில் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக்கூடங்கள் விரிவாக்கம் செய்யப்படாமல் மாணவர்களுக்குச் சிரமம் இருக்கிறது. பாடப் பிரிவுகள் அதிகமாக தொடங்கியிருக்கின்ற இந்த நேரத்தில் இந்த ஆண்டு கூடுதல் வகுப்பறைகளையும், அடிப்படை வசதிகளையும் இந்த இரண்டு கல்லூரிகளிலும் செய்து தருவார்களா என்று தங்கள் மூலமாக கேட்டு அமர்கின்றேன்.*

[2014 டிசம்பர் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கல்லூரிகளுக்குத் தேவையான கட்டடம் கட்டுவதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே, 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம் இப்போது கட்டடம் கட்டுகின்ற பணி நடைபெற்று வருகிறது. இருந்தாலும்கூட, அரசு சார்ந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குக் கட்டடம் கட்டுவது என்றால், பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் கட்டலாம்; சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் கட்டலாம்; தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவும் கட்டலாம்; அரசும் கட்டலாம். எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கே மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும்கூட கட்டுவதற்கு வழி இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் சுமார் 2,000 கிராமப்புற மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகிறார்கள். இங்கு 2* shift *முறையில் கல்லூரி இயங்கி வந்தபோதிலும், போதிய வகுப்பறை கட்டடங்கள் இல்லாததை நான் அறிகிறேன். இந்தக் கல்லூரியில் அரசு திட்டத்தின்கீழ், இரும்பு தளவாடங்கள் மற்றும் மரச் சாமான்கள் அரசுமூலம் வழங்கப்பட்டுள்ளன. எனது சொந்த முயற்சியின் மூலமும் ரூபாய் 4 இலட்சம் செலவில் மேசை மற்றும் மாணவ மாணவியர் அமர்வதற்கான இருக்கைகள் உள்ளிட்ட மரத் தளவாடங்கள் வழங்கப்பட்ட நிலையில், இவற்றை வைத்து பயன்படுத்துவதற்குப் போதிய கட்டட வசதி இல்லை.*

2014 டிசம்பர் 4]

மேலும், இக்கல்லூரியில் தனியார்மூலம் கலை அரங்கம் கட்ட தடையின்மைச் சான்று பெறுவதற்குரிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதை துரிதப்படுத்தி, கலையரங்கம் கட்ட அனுமதி வழங்கிடவும், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தருவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுரண்டையில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு போதிய கட்டட வசதிகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்கே மாணவர்களுடைய எண்ணிக்கையும் தற்போது அதிகரித்து இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல சுழற்சி முறை ஒன்றிலும், சுழற்சி முறை இரண்டிலும் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அப்படியிருக்கின்றபட்சத்தில் அங்கே கல்லூரிக்குக் கூடுதலாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கலையரங்கம் கட்டுவதற்கு தனியார் நிதியளிக்க முன்வருகின்றார்கள்; அதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தனியார் அங்கே கட்டடம் கட்டுவதற்கு நிதியை வழங்குகின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதற்கான மனுவை சமர்ப்பித்தால், அதனுடைய உண்மைத்தன்மையை அறிந்து, அதாவது பங்களிப்பு என்பது சமுதாயத்தின்மீது நல்ல எண்ணம் கொண்ட நோக்கத்தோடு கொடுக்கின்றார்களா என்பதைப் பார்த்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒப்புதலைப் பெற்று, அதற்கு அனுமதி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*